# இலங்கை முஸ்லிம்களின் வரலாறு

இலங்கை வணிகச் செயற்பாட்டிற்கு தொன்மைக் காலத்திலேருந்தே புகழ்பெற்றிருந்தது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே உலக வியாபாரிகளாக இருந்தவர்களும் கடலில் ஆதிக்கம் உள்ளவர்களும் இங்கு வர்த்தகர்களாக வருகை தந்தனர். அவர்களில் கிரேக்கர்களும் அரபியர்களும் பாரசீகர்களும் மிக முக்கியமானவர்கள். கிறிஸ்துவுக்குப் பின் 4ம் நூற்றாண்டு தொடக்கம் 7ம் நூற்றாண்டு வரைக்கும் இடைப்பட்ட காலப் பிரிவில் இலங்கைத் தீவானது பாரசீகம், எதியோப்பியா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் வணிகர்கள் ஒன்று கூடும் ஒரு முக்கிய மத்திய வணிகத் தலமாக விளங்கியது என பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

இந்தியாவிற்கு வந்த பன்னாட்டு வணிகர்கள் இலங்கைக்கும் வருகை தந்தனர். ரோமர், பாரசீகர், அபீசீனியர், அரேபியர் ஆகியோர் இந்து சமுத்திர வணிகத்தில் முக்கிய இடம் வகித்தனர் என்று பல்வேறு வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்தவகையில் அரபுதேசத்தடனான தொன்மையான தொடர்பைக் கொண்டிருந்த இலங்கைக்கு கி.பி 7ம் நூற்றாண்டுகளில் இஸ்லாமிய மார்க்கமும் அறிமுகமானது. ஆரம்பகால வரலாற்றை நோக்கும் போது, இலங்கையில் அல்குர்ஆன் - ஹதீஸ் என்ற இரண்டு மூலாதாரங்களின் அடிப்படையிலான தூய இஸ்லாம் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டு, பின்பற்றப்பட்டுவந்துள்ளது என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது.

உலகில் அமைதியான பூமியாக இலங்கைக்கு அப்போது வருகைதந்த வணிகர்களால் நோக்கப்பட்டுள்ளது. அரபு நாட்டில் ஏற்பட்ட சில அரசியல் பிரச்சினைகள் காரணமாக, அரபு முஸ்லிம்கள் சிலர் அமைதியான இப்பூமியில் வாழ்வதற்காக அபயம் தேடி வந்துள்ளனர். 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளில் முஸ்லிம்களின் குடியேற்றம் பற்றிய வரலாற்று தகவல்கள் ஆவண ரீதியாகப் பதிவை பெற்றுள்ளதோடு, அது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவும் உள்ளது. மக்காவில் இஸ்லாம் அறிமுகமான போது, அங்கு வாழ்ந்தவர்கள் அதை ஏற்றுக்கொண்டனர். அந்தவகையில், எட்டாம் நூற்றாண்டிலேயே குடியேற்றம் இருந்தது என்பதை இலங்கை வரலாற்று ஆய்வாளர்களும், ஐரோப்பிய கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

15ம் நூற்றாண்டின் பின்னர் முஸ்லிம்களின் தொடர்பு தென்னிந்தியாவை நோக்கி திரும்பியிருந்தது. அரபுலகத் தொடர்புகள் மெல்ல செல்வாக்கிழந்து சென்றன. தென்னிந்திய முஸ்லிம்களின் மட்டுப்படுத்தப்பட்ட கலாசார, சமய அறிவுடனும் பழைமைவாதத்துடனும் இலங்கை முஸ்லிம்களின் வெளியுலகத் தொடர்புகள் சுருங்கிச் சென்றன. இலங்கை முஸ்லிம்கள் 19ஆம் நூற்றாண்டு முடியும் கட்டத்தில் கூட, சூபித்துவ விவாதங்களிலும் இஸ்லாம் அங்கீகரிக்காத விடயங்களிலும் தமது காலத்தைச் செலவிட்டனர். தங்களுக்குத் தெரிந்திருந்த சமய அறிவிற்கும் அணுகுமுறைகளுக்கும் அப்பால் எதையும் அனுமதிப்பதற்கு மறுத்தவர்களாகவே பலர் இருந்தனர்.

பரந்து விரிந்து காணப்பட்ட இஸ்லாமிய உலகில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் காரணமாக பல்வேறு சிந்தனைகள் இஸ்லாத்தின் பெயரால் உட்புகுத்தப்பட்டன. எனினும், உண்மையான இஸ்லாத்திற்கு எத்தகைய மாசும் ஏற்படாமல் அது இன்றுவரை பாதுகாக்கப்பட்டுள்ளது.

எனினும், அவ்வப்போது இஸ்லாத்தின் பெரால் தோற்றம் பெற்ற தவறான சிந்தனைகள், பன்னாட்டு வர்த்தக மையமாகக் காணப்பட்ட இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்களிடமும் தாக்கம் செலுத்தியது. அந்த வகையில் இலங்கையில் மத்ஹபுகள், தரீக்காக்கள் அஹமதிய்யா, ஷீஆ சிந்தனைகள் போன்றன தாக்கம் செலுத்தின.

இலங்கை வரலாற்றை நோக்கும் போது, இங்குள்ள முஸ்லிம்களின் பண்பாடு, நாகரிகம், மார்க்க விடயங்கள், இயக்கச் செயற்பாடுகள் என்பவற்றின் பின்னணியைப் புரிந்த கொள்வதற்கு அவர்களின் வரலாறு பற்றி அறிந்துகொள்வது துணைபுரியும் என்பதால் அவர்களின் வரலாறு சுருக்கமாக இவ்வாக்கதில் முன்வைக்கப்படுகிறது.

# இலங்கை முஸ்லிம்களின் வரலாறு

## ஒரு சுருக்கமான பார்வை

*Part – 1*

*அஷ்ஷைய்க் M.A. ஹபீழ் ஸலபி (M.A)*

*இலங்கையின் புவியியல் நிலையும் பசுமையும் செழிப்பும் இங்கு காணப்பட்ட இயற்கை வளங்களும் வாசனைப் பொருள்களும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பிறநாட்டு வணிகர்களின் கவனத்தைக் வெகுவாகக் கவர்ந்திருந்தன. அத்தோடு, இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையில் அமைந்துள்ள இலங்கையின் அமைவிடமும் அதில் காணப்பட்ட செல்வங்களான முத்து, யானை போன்றனவும் பலரையும் ஈர்த்தன.*

*இதனால், இலங்கை வணிகச் செயற்பாட்டிற்கு தொன்மைக் காலத்திலேயிருந்தே புகழ்பெற்றிருந்தது. எனவே, கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே உலக வியாபாரிகளாக இருந்தவர்களும் கடலில் ஆதிக்கம் உள்ளவர்களும் இங்கு வர்த்தகர்களாக வருகை தந்தனர். அவர்களில் கிரேக்கர்களும் அரபியர்களும் பாரசீகர்களும் மிக முக்கியமானவர்கள்.*

*இலங்கை, இந்தியாவிற்கு மிக அருகில் அமைந்திருந்தமையும் இவர்களின் வருகைக்கு மிக முக்கிய காரணமாக அமைந்தது. இந்தியாவிற்கு வந்த பன்னாட்டு வணிகர்கள் இங்கும் வருகை தந்தனர். ரோமர், பாரசீகர், அபீசீனியர், அரேபியர் ஆகியோர் இந்து சமுத்திர வணிகத்தில் முக்கிய இடம் வகித்தனர் என்று பல்வேறு வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.*

*கிறிஸ்துவுக்குப் பின் 4ம் நூற்றாண்டு தொடக்கம் 7ம் நூற்றாண்டு வரைக்கும் இடைப்பட்ட காலப் பிரிவில் இலங்கைத் தீவானது பாரசீகம், எதியோப்பியா, இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் வணிகர்கள் ஒன்று கூடும் ஒரு முக்கிய மத்திய வணிகத் தலமாக விளங்கியது. கிறிஸ்துவுக்குப் பின் ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த எகிப்திய மதகுருவான கொஸ்மொஸ் அவரது* Popographia Chiristiana *எனும் நூலில் இந்தியா, பாரசீகம், எதியோப்பியா ஆகிய நாடுகளின் வணிகக் கப்பல்கள் இலங்கைத் துறைமுகங்களை வணிக நோக்கம் கருதி தரிசித்ததாக குறிப்பிடுகின்றார்.*

*கிரேக்கர்களும் ரோமர்களும் இலங்கையை அறிந்திருந்த காலத்திற்கு முன்னரே அரேபியர் இலங்கையை அறிந்திருந்தனர். அவர்கள் இலங்கைக்கு வந்து செல்லும் வழக்கத்தையும் ஆரம்பித்திருந்தனர். அவர்கள் மத்திய தரைக்கடல் நாடுகள் ஊடாகவும் கிழக்காசிய நாடுகள் ஊடாகவும் செய்து வந்த வர்த்தகமும் அவர்கள் அறிந்திருந்த வர்த்தகப் பாதைகளும் இந்தியாவையும் இலங்கையும் அறிவதற்கு அவர்களுக்கு வாய்ப்பினை வழங்கின.*

*செங்கடல், அரபிக்கடல் மற்றும் பாரசீக வளைகுடா என்பனவற்றின் ஒன்றிணைந்த தொடர்புடன் இந்தியக் கரை, இலங்கைக் கரைகளை இந்து சமுத்திரக் கடல் பாதையை அரேபியாவிற்கு வழங்கியது. வரலாற்றில் இந்தியாவைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னதாகவே அரேபியக் கடலோடிகள் இந்திய கடலில் தமது நாவாய்களுடன் பிரவேசித்தனர். தெற்கு, தென்கிழக்கு ஆசிய பிராந்தியங்களில் அவர்கள் சிறு அளவிலான குடியிருப்புகளை நிறுவினர். கிறிஸ்துவுக்கு முன் 310 ஆம் ஆண்டிலேயே இலங்கைக் கூடாக சுமத்ராவுக்கும் மடகஸ்காருக்கும் இடையிலான வர்த்தகத்தை அவர்கள் நடத்தி வந்துள்ளனர்.*

*மலபார் கரைகளிலும் இலங்கைக் கரைகளிலும் அரேபியர் பெரிய அளவில் காணப்பட்டனர் என்றும், அவர்கள் கடற்கரையோர எஜமானர்கள் என்றும் பிளினி குறிப்பிடுகிறார்.*

*கிறிஸ்துவுக்குப் பின் 4ம் நூற்றாண்டில் இருந்து கிறிஸ்துவுக்குப் பின் 6ம் நூற்றாண்டு வரை பாரசீகர்களும் அபீசீனியர்களும் தமது வர்த்தக ஆதிக்கத்தை செலுத்தினர். இக்காலப் பிரிவில் பாரசீகர், இலங்கையை தமது சர்வதேச வர்த்தகத்தின் பெரும் மையமாக வளர்த்தனர்.*

*இவ்வாறு, வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில் நோக்கும் போது, பாரசீகர், அபீசீனியர், அரேபியர் போன்றோரின் நடமாட்டங்களும், குடியேற்ற முயற்சிகளும் கிறிஸ்துவுக்கு முன் 4ம் நூற்றாண்டுக்கு முன்னதாகவே ஆரம்பித்திருக்க வேண்டும் என்பதை கிறிஸ்துவுக்குப் பின் 150 க்குரிய குலோடியஸ் தொலமியின் தேச வரைபடங்கள் உணர்த்துகின்றன.*

பாரசீகத்தின் பூர்வீக கிறிஸ்தவர்கள் அனுராதபுரத்தில் Church கட்டி இருந்ததாக தொல்பொருள் ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

கிறிஸ்துவுக்குப் பின் 8ம் நூற்றாண்டளவில் முஸ்லிம்களின் பூர்வீகம் ஆரம்பமாகின்றது என Sir Alexander Johnston குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவுக்கு முன்பிலிருந்தே இலங்கையில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள், இலங்கையை அமைதியான வணிக பிரதேசம் என்று அறிந்திருந்தனர். பன்னாட்டு வணிகத்தில் முக்கிய இடம் வகித்த அரேபியர்கள் சிலர் இங்கு வந்து குடியேறினர். இதனால், 8ம் நூற்றாண்டளவில் சிறிய சிறிய நகரங்கள் உருவாகியிருந்தன.

உலகில் அமைதியான பூமியாக இலங்கைக்கு அப்போது வருகைதந்த வணிகர்களால் நோக்கப்பட்டுள்ளது. அரபு நாட்டில் ஏற்பட்ட சில அரசியல் பிரச்சினைகள் காரணமாக, அரபு முஸ்லிம்கள் சிலர் அமைதியான இப்பூமியில் வாழ்வதற்காக அபயம் தேடி வந்துள்ளனர். அவர்களது முன்னோர்கள் இங்கு அமைதியாக வாழ்ந்து வருகின்றனர் என்பதால், அவர்கள் இலங்கையைத் தேர்வு செய்துள்ளனர். 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளில் முஸ்லிம்களின் குடியேற்றம் பற்றிய வரலாற்று தகவல்கள் ஆவண ரீதியாகப் பதிவை பெற்றுள்ளதோடு, அது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவும் உள்ளது.

மக்காவில் இஸ்லாம் அறிமுகமான போது, அங்கு வாழ்ந்தவர்கள் அதை ஏற்றுக்கொண்டனர். எட்டாம் நூற்றாண்டிலேயே குடியேற்றம் இருந்தது என்பதை இலங்கை வரலாற்று ஆய்வாளர்களும், ஐரோப்பிய கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். அரபு நாட்டிலிருந்து வந்தவர்களும் இந்த நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த மக்களில் சிலரும் இஸ்லாத்தை ஏற்றனர். சிலர் அரபு நாட்டிற்குத் திரும்பினர்.

”இலங்கை முஸ்லிம்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு செய்த பங்களிப்புக்கள் பற்றி சமூகக் கலந்துரையாடல்கள் *(social dialogues)* இடம்பெறுவதில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். அரேபியாவில் இஸ்லாம் அறிமுகமான போது இலங்கையில் வர்த்தகம் செய்த பெரும்பாலான அரபு வர்த்தகர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தீர்மானித்தார்கள்.

அரபு வணிகர்கள் இலங்கையில் இருந்து வெளியேறுவதன் மூலம் நாட்டின் பொருளாதரத்திற்கு பாரிய சிக்கல்கள் ஏற்படும் என்பதை அன்றைய அநுராதபுர ராஜ்யத்தின் மன்னர் 2ம் அக்ரபோதி *(king Agrabodhi II )* அவர்கள் அறிந்துகொண்டார். அரபு வர்த்தகர்கள் நாட்டில் இருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கான முழு சமய உரிமைகளும் வழங்கப்படும் என்றும் மன்னர் உறுதியளித்தார்.

பின்னர் மன்னர் 2ம் அக்ரபோதி அவர்கள் தனது விஷேட தூதுவர் ஒருவரை நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹூஅலைஹிவஸல்லம்) அவர்களை சந்திப்பதற்காக மதீனா நகருக்கு அனுப்பி வைத்தார். இஸ்லாம் சமயத்தின் வழிகாட்டல்கள் அடங்கிய ஆவணத்தை தனது தூதுவரிடம் அனுப்புமாறும் அதன் மூலம் இலகுவாக அந்த சமயத்தை இலங்கையில் உள்ள அரபு வர்த்தகர்களுக்கப் பின்பற்றலாம் என்றும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மன்னர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்” என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பீடப் பேராசிரியர் தயா அமரசேகர அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இவ்வாறு வரலாற்றை நோக்கும் போது, முஸ்லிம்கள் பாரம்பரிமாகப் பரம்பரைத் தொடர்புடைய இந்த நாட்டுப் பிரஜைகளாக வாழ்ந்து வருகின்றனர். மற்ற இனங்களுக்கு உள்ளது போன்ற வரலாறு முஸ்லிம்களுக்கும் உள்ளது. மன்னர்களின் காலத்திலும் முஸ்லிம்கள் நன்மதிப்பைப் பெற்றிருந்துள்ளனர். முக்கிய பதவிகளை வகித்துள்ளனர். நாட்டிற்கான விசுவாசத்தை வெளிப்படுத்தி, தேசியப் பாதுகாப்பிலும் தேச நலனிலும் அக்கறை கொண்டிருந்தள்ளனர். இஸ்லாத்திற்கு முந்திய காலப்பகுதியில் இருந்து அரபுகள், இலங்கையுடன் வணிகத்தில் ஈடுபட்டபோது, அவர்களிடம் எப்போதும் தாராள மனப்பான்மையும் நல்ல பண்பாடும் இருந்ததை இந்நாட்டு மக்கள் அவதானித்ததால்தான் வரவேற்று, வாழ வழி ஏற்படுத்தினர்.

இஸ்லாத்தை அவர்கள் நல்லதோர் மார்க்கமாகவும் வாழ்க்கை நெறியாகவும் கண்டார்கள். நேர்மையான வியாபாரம், யாருக்கும் அநியாயம் செய்யாத போக்கு, தாராள மனப்பான்மை, ஈகைத் தன்மை, நடைமுறைக்கு இலகுவான நல்ல வாழ்க்கை முறை, சுத்தம், பிற மக்களை சமனாகக் கருதும் பண்பாடு, இணைந்து உணவருந்தும் கலாசாரம் என்பவற்றை அவதானித்தபோது, அவர்களை இஸ்லாமிய மார்க்கம் ஈர்த்தது. இலங்கையில் வணிகம் மேற்கொண்ட அரபுகள் தொடர்பாக எந்த ஆய்வாளரும்

குறை கூறியதாக எந்தப் பதிவுகளையும் காண முடியவில்லை. எந்த ஓர் அரபு வணிகரையும் கெட்டவராகவோ, ஏமாற்றியவராகவோ பிறருக்கு அநியாயம் இழைத்தவராகவோ வரலாற்றில் எங்குமே குறிப்பிடப்படவில்லை. நல்ல வணிகர்களுக்கு உரிய பண்புகள் அரபுக்களிடம் காணப்பட்டுள்ளன. அதனால், இஸ்லாத்தின் வருகைக்குப் பின்னரும் முஸ்லிம்களுக்கு இலங்கையில் வரவேற்புக் கிடைத்தது. கரையோரப் பிரதேசங்களில் வாழ்ந்த இலங்கைப் பெண்களை அவர்கள் திருமணம் செய்தனர். தொடரந்து இலங்கையிலேயே வாழ்ந்தனர்.

அரேபியரின் அரசியல் பலம் வலிமை பெற்று, இஸ்லாம் பரவிய போது, பாரசீகர், அபீசீனியர் உட்பட உலகின் பல வர்த்தக இனங்கள் இஸ்லாமியக் கொடிகளின் கீழ் ஒன்றுபடுத்தப்பட்டன. முஸ்லிம்கள் என்ற புதிய சமய ஒருமைப்பாட்டின் கீழ் மீண்டும் தமது தொன்மை வர்த்தக ஆதிக்கத்தை இலங்கைத் துறைமுகங்களில் அவர்கள் நிலைநாட்டினர். (W.I.Sriweera2002, Lorna Dewaraja 1994)

கி.பி ஏழாம் நூற்றாண்டில் பாரசீகம் இஸ்லாத்தினால் வெற்றி கொள்ளப்படுகிறது. அதைத்தொடர்ந்து பாரசீகர் கையாண்ட கடல் வர்த்தகப் பாதைகள், முஸ்லிம்களுக்குரிய பாதைகளாக மாற்றம் பெற்றன. அதேவேளை, இலங்கையில் வாழ்ந்து கொண்டிருந்த அரேபியரும் தமது சொந்த நாடுகளில் இஸ்லாம் பரவியதை அறிந்து, இஸ்லாத்தைத் தழுவினர்.

'அரபு நாடுகளில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்புகள் காரணமாக அங்கிருந்து வெளியேறியவர்கள், அல்லது துரத்தப்பட்டவர்கள் யூப்ரடீஸ் நதியிலிருந்து தெற்கு நோக்கி வந்து, கொங்கனிலும் இந்திய தீபகற்பத்தின் தெற்குப் பகுதிகளிலும் இலங்கைத் தீவிலும் மலாக்காவிலும் குடியேறினர். இலங்கையை அடைந்தவர்கள் 8 பெரிய குடியிருப்புக்களை வடகிழக்கு, வடமேற்கு, வடக்கு, மேற்குக் கரைகளில், குறிப்பாகத் திருகோணமலை, யாழ்ப்பாணம், குதிரைமலை, புத்தளம், கல்பிட்டி, மன்னார், கொழும்பு,காலி ஆகிய இடங்களில் தோற்றுவித்தனர்.

அரபுக்களின் தொன்மையான தொடர்பை இலங்கை பெற்றிருந்ததுபோலவே, இன்று மீண்டும் அந்த வரலாறு தொடர்வதை அவதானிக்கமுடிகிறது. இன்று இலங்கையின் பல இலட்சக்கணக்கான இளைஞர்கள் அரபு நாடுகளில் தொழில் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றனர். இந்த தொழில் வாய்ப்பை இலங்கை அரசாங்கமே அங்கீகரித்து, ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தொழில் வாய்ப்பை வேண்டி நிற்கும் இலங்கையர் யாராக இருந்தாலும் அரபு நாடுகள் இன, மத பாகுபாடின்றி, சமத்துவமாக வழங்கியுள்ளது. நீண்டகாலமாக இலங்கையுடனான நட்புறவை அரபு நாடுகள் துண்டிக்காமல் பேணி வருகின்றன.

இலங்கை வரலாற்றை நோக்கும் போது, இலங்கையில் இஸ்லாம் மிக அமைதியான முறையிலும் சரியான வழியிலும் அறிமுகமானது. அல்குர்ஆனையும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளையும் மட்டும் பின்பற்றும் முஸ்லிம்களே இலங்கையில் அன்று வாழ்ந்து வந்தனர். இடைப்பட்ட காலத்தில் தென்னிந்திய, மலபாரிகளின் தொடர்புகளும் அவர்களின் குடியேற்றங்களும் இலங்கையில் நிகழ்ந்தன.

15ம் நூற்றாண்டின் பின்னர் முஸ்லிம்களின் தொடர்பு தென்னிந்தியாவை நோக்கி திரும்பியிருந்தது. அரபுலகத் தொடர்புகள் மெல்ல செல்வாக்கிழந்து சென்றன. தென்னிந்திய முஸ்லிம்களின் மட்டுப்படுத்தப்பட்ட கலாசார, சமய அறிவுடனும் பழைமைவாதத்துடனும் இலங்கை முஸ்லிம்களின் வெளியுலகத் தொடர்புகள் சுருங்கிச் சென்றன.

இலங்கை முஸ்லிம்கள் 19ஆம் நூற்றாண்டு முடியும் கட்டத்தில் கூட, சூபித்துவ விவாதங்களிலும் இஸ்லாம் அங்கீகரிக்காத விடயங்களிலும் தமது காலத்தைச் செலவிட்டனர். தங்களுக்குத் தெரிந்திருந்த சமய அறிவிற்கும் அணுகுமுறைகளுக்கும் அப்பால் எதையும் அனுமதிப்பதற்கு மறுத்தவர்களாகவே பலர் இருந்தனர். எந்த மொழியையும் கற்பதை இஸ்லாம் தடை விதிக்கவில்லை. எனினும், இலங்கை தேசத்தை ஆக்கிரமித்த ஆங்கிலேயரை எதிர்ப்பதற்காகவும் இலங்கை தேசத்தின் மீதான தமது பற்றை வெளிப்படுத்துவதற்காகவும் ஆங்கில மொழியைக் கற்பதைக் கூட ஹராம் என்று முஸ்லிம்களில் பலர் கருதினர்.

இடைப்பட்ட காலத்தில் தூய இஸ்லாத்தின் அடிப்படைகளான அல்குர்ஆனும் நபி (ஸல்) அவர்களின் போதனைகளிலும் இல்லாத புதுமையான பல விடயங்களை இஸ்லாம் என்று கருதி மக்கள் செய்ய ஆரம்பித்தனர். இந்திய, மலாய் மற்றும் பிற கலாசாரங்கள் முஸ்லிம்களின் வாழ்வில் ஒன்று கலந்தன. இதனால், இஸ்லாம் எது? இஸ்லாம் அல்லாதது எது? என்ற ஒரு குழப்ப நிலை தோற்றம் பெற்றது. இக்கால கட்டத்தில் சில அறிஞர்கள் அல்குர்ஆனையும் நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளையும் பின்பற்றி, அல்லாஹ் ஒருவனை மாத்திரம் வணங்க வேண்டும் என்று பிரசாரம் செய்தனர். அறிஞர் எம்.சி

சித்தி லெப்பையும் (1838-1898) அவருடன் இணைந்திருந்த சில படித்தவர்களும் 19ம் நூற்றாண்டில் சமய சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டவர்களில் முக்கியமானவர்கள்.

அவர் சீதன எதிர்ப்பை மேற்கொண்டார். சீதனம் – வரதட்சணை பிறமதக் கலாசாரம். அது முஸ்லிம்களிடம் புகுந்துவிட்டது. அதை அங்கீகரிக்க முடியாது என்று அவர் வாதிட்டார். விவாகப் பதிவும் விவாகரத்தும் சட்ட அந்தஸ்துப் பெற வேண்டும் என்ற கோரிக்கையை எம்.சி சித்திலெப்பையின் தலைமையில் படித்த வகுப்பினர் முன்வைத்தனர். இதில் நிகழ்ந்து வந்த அநீதிகளையும் மோசடிகளையும் இக்குழுவினர் சுட்டிக்காட்டினர். இவ்வாறான சமய சீர்திருத்தக் கருத்துக்களும் பரவலாக முன்வைக்கப்பட்டன. குறிப்பாக அவ்லியா - தர்கா வழிபாடுகளை அவர் எதிர்த்தார். இறைவன் பற்றிய தவறான விளக்கங்களையும் இவர்கள் எதிர்த்தனர். சமயத்தின் பெயரினால் தடுக்கப்பட்டு இருந்த நவீன ஆங்கில கல்விக்காக அவர்கள் குரல் எழுப்பினர்.

அவருடைய இத்தகைய நடவடிக்கைகள் மாற்றத்தின் அடையாளங்களை வெளிப்படுத்தின. அதேநேரத்தில், பழைமை மரபுகளால் பயனடைந்து வந்த பள்ளிவாசல் நிர்வாகிகளும் அனேக ஆலிம்களும் அறிஞர் சித்தி லெப்பையின் சீர்திருத்தங்களை எதிர்த்தனர். புதிய சமூக சீர்திருத்தத்திற்காகக் குரல் எழுப்பிய படித்த வகுப்பினர் பெரும் எதிர்ப்புகளை சமாளிக்க வேண்டியிருந்தது என்று இதனை சுருக்கமாகக் கூறலாம்.

இலங்கையின் சுதந்திரத்திற்காக இலங்கையர் அனைவரும் இணைந்து போராடினர். 20ம் நூற்றாண்டில் எல்லா மதங்களிலும் சீர்திருத்த நடவடிக்கைகள் இயக்க ரீதியான பரிமாணம் பெற்றது. அந்தவகையில் இலங்கையில் முஸ்லிம்களுக்கு மத்தியிலும் இயக்க ரீதியான சீர்திருத்த சமயப் புத்துயிர்ப்புச் செயற்பாடுகள் ஆரம்பமாகின.

**உசாத்துணைகள்**


I. கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி (2014)இலங்கை முஸ்லிம்கள் தொன்மைக்கான வரலாற்றுப் பாதை - தாருல் புஷ்ரா பதிப்பகம் – கொழும்பு.
II. எம்.ஐ.ம் அமீன் (2010) இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் – இஸ்லாமிக் புக் ஹவுஸ்- கொழும்பு.
III. எம்.எஸ்எம். அனஸ் (2021) புத்தளம் முஸ்லிம்கள் வரலாறும் வாழ்வியலும் - குமரன் புத்தக இல்லம் - கொழும்பு.
IV. Dr. M.A.M ,Sukry (Ed) (1986) Muslims Of Sri Lanka Avenues To Antiquity – Jamiah Naleemiyya- Beruwala.
V. Dewaraja Lorna (1994) The Muslims Of Sri Lanka-Colombo.
VI. எம்.எஸ்எம். அனஸ் (2021) தற்கால இஸ்லாமியச் சிந்தனை - அடையாளம் – திருச்சி.
VII. எம்.ஐ.ம் அமீன் (2010) இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட முன்னோடிகள், அல்ஹஸனாத் பதிப்பகம் - ஹெம்மாதகம.


.